# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035
தொலைபேசி எண். 044 - 2951 5590

**ஆணை நாள் - 05.06.2025**

**முன்னிலை**

**திரு முகம்மது ஷகீல் அ்ஃதர், இகாப (ஓய்வு)**
**மாநில தலைமை தகவல் ஆணையர்**

*****

## வழக்கு எண். CP 4530/SCIC/2023

திரு.S.சுடலைமுத்து — புகார்தாரர்
எண்.318/2, மெயின்ரோடு
நாகல் குளம்,
பெத்தநாடார்பட்டி அஞ்சல்-627 808
ஆலங்குளம் தாலுக்கா
தென்காசி

//எதிர்//

பொதுத் தகவல் அலுவலர்/
சார்பதிவாளர் ....... பொதுஅதிகார அமைப்பு
சார்பதிவாளர் அலுவலகம்
பாவூர்சத்திரம், தென்காசி மாவட்டம்

**ஆணை**

| | | |
|---|---|---|
| 1. | மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்ட மனு | 16.11.2023 |
| 2. | பொதுத் தகவல் அலுவலரின் பதில் | 15.12.2023 |
| 3. | மனுதாரரின் புகார் மனு | 26.12.2023 |
| 4 | பின்னர் பொதுத் தகவல் அலுவலரின் பதில் | 28.10.2024 |
| 5. | மனுதாரரின் ஆட்சேபணை மனு | 19.12.2024 |

1. மனுதாரர், பொதுத் தகவல் அலுவலர் / பாவூர்சத்திரம் சார்பதிவாளர் அலுவலகம், தென்காசி மாவட்டம் அவர்களுக்கு அனுப்பிய மனுவில், கீழ்க்கண்டவாறு கோரியுள்ளார், “ஆலங்குளம் வட்டம், பெத்தநாடார்பட்டி பகுதி-2 கிராமம், பாவூர் சத்திரம் சார்பதிவாளர் அலுவலக சரகத்திற்குட்பட்ட பட்டா எண்.1063-ன்படி சர்வே எண்.61/1F1-ல் 23,00 ஏர்ஸ் - பத்திரப் பதிவு ஆவண எண்.5391/2023, நாள் 13/10/2023- தொடர்பாக - மேற்படி பத்திரப்பதிவு செய்த சார்பதிவாளர் பெயர் மற்றும் முழுவிபரம் அடங்கிய கோப்பின் நகல் தருக” என்பன போன்று 4 (நான்கு) இனங்களில் தகவல்களை வழங்கக் கோரியுள்ளார்.

**2. இன்றைய (05/06/2025) காணொளி காட்சி வாயிலான விசாரணைக்கு மனுதாரர் தென்காசி மாவட்ட ஆட்சியரகத்திலிருந்து கலந்து கொண்டார். பொது அதிகார அமைப்பின் சார்பில், ஆணையத்தின் முன் திரு.த.நாகராஜன், சார்பதிவாளர் (பொறுப்பு), பாவூர்சத்திரம் சார்பதிவகம் அவர்கள் ஆஜராகி மனுதாரருக்கு 15/12/2023 மற்றும் 28/10/2024 தேதிகளிட்ட கடிதங்கள் வாயிலாக தகவல்களை அனுப்புயுள்ளதாகத் தெரிவித்தார். அதற்கு மனுதாரர், பொதுத் தகவல் அலுவலர் அளித்த தகவலில் இனங்கள் 3 மற்றும் 4-க்கு தவறான தகவல் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார். தற்போதைய பொதுத் தகவல் அலுவலர், மனுதாரர் கோரியவாறான இனம் 3, 4-க்கு சுற்றறிக்கை எதுவும் தமது அலுவலகத்தில் பராமரிக்கப்படவில்லை எனத் தெரிவித்தார். அதற்கு மனுதாரர், முன்னாள் பொதுத் தகவல் அலுவலர் 15/12/2023 தேதியிட்டு, தனக்கு அனுப்பிய தகவலில் தன்னை கட்டணம் செலுத்தி நகல்களைப் பெற்றுக் கொள்ளுமாறுத் தெரிவித்ததோடு, இணையதள முகவரியும் அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது என்றார். ஆணையம் 15/12/2023 தேதியிட்ட தகவலைப் பரிசீலனை செய்கையில், மனுதாரரின் வாதுரையினை ஆணையம் பதிவு செய்து ஏற்கிறது. எனவே, அவ்வாறு தவறான தகவலை வழங்கிய அப்போதைய (15/12/2023 தேதிய) பொதுத் தகவல் அலுவலர் திரு.சதிஸ்குமார் (தற்போது) 2 எண்.இணை சார்பதிவாளர், தென்காசி அவர்கள் மீது ஏன் பிரிவு 20(1) மற்றும் பிரிவு 20(2)-ன் கீழ் நடவடிக்கை எடுக்கக் கூடாது என்பதற்கான காரண விளக்கத்தை, இவ்வாணை கிடைக்கப் பெற்ற 15 தினங்களுக்குள் தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் பெற்று, அதனை 26/06/2025 அன்று பிற்பகல் ஆணையத்தில் நேரடியாக ஆஜராகி சமர்ப்பிக்க வேண்டுமென ஆணையம் உத்தரவு பிறப்பிக்கின்றது.**

ஒம்./-(**முகம்மது ஷகீல் அஃதர்**)
மாநில தலைமை தகவல் ஆணையர்

**//ஆணைப்படி//**

**உதவி பதிவாளர்**

**<u>வழக்கு எண். CP 4530/SCIC/2023</u>**

**பெறுநர்**

**பொதுஅதிகார அமைப்பு**

1.பொதுத் தகவல் அலுவலர்/
சார்பதிவாளர்
சார்பதிவாளர் அலுவலகம்
பாவூர்சத்திரம், தென்காசி மாவட்டம்

2.திரு.சதிஸ்குமார்
முன்னாள் பொதுத்தகவல் அலுவலர்
(தற்போது)2 எண்.இணை சார்பதிவாளர்
தென்காசி.

**மேல்முறையீட்டாளர்**

திரு.S.சுடலைமுத்து
எண்.318/2, மெயின்ரோடு
நாகல் குளம்,
பெத்தநாடார்பட்டி அஞ்சல்-627 808
ஆலங்குளம் தாலுக்கா, தென்காசி

நகல்
பதிவுத்துறைத் தலைவர்
பதிவுத்துறைத் தலைவர் அலுவலகம்
பட்டினப்பாக்கம், சென்னை-28

பதிவாளர்
தமிழ்நாடு தகவல் ஆணையம்
நந்தனம், சென்னை-28

RG/PC